DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-69/2023

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.செந்துாரான் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 present.)

03.03.2026 – 12.35 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடி கிராமத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2, 3 ஐத் எனக்கு தெரியும். எனது மனைவி மற்றும் மகன் ஆவார்கள்

2. கடந்த 24.02.2023ம் தேதி சாயல்குடிக்கு எனது ஆட்டோவில் சவாரிக்காக சென்றிருந்தேன். ஆடு மேய்ப்பவர்களுக்காக ஒயின்ஷாப்பில் 4 மதுபாட்டில்களை வாங்கினேன். அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த எதிரி மாரிமுத்து என்பவர் 4 பாட்டில்களை எதற்காக வாங்குகிறாய் என்று கேட்டார். அதற்கு நான் நீ ஏன் அதை கேட்கிறாய் என்று கூறினேன். அந்த இடத்தில் எதிரி மாரிமுத்து என்னை அடித்து விட்டார். அந்த இடத்திற்கு வில்வதுரை, வில்வதுரை மகன், முருகன் ஆகியோர் வந்து விட்டார்கள். அப்போது என்னை அந்த இடத்தில் இருந்த நபர்கள் மறைத்து வைத்துவிட்டார்கள். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் மறுநாள் 25.02.2023ம் தேதி காலை 07.00 மணியளவில் கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு அருகே எனது வீட்டின் அருகே நான் பல்தேய்த்து கொண்டிருந்தேன்.

3. நம்பர் பிளேட் இல்லாத பல்சர் புல்லட் மற்றும் ஸ்கூட்டி வாகனத்தில் ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் அங்கு வந்து அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். அப்போது எனக்கு காயம் ஏற்பட்டது. எதிரிகள் வந்த இருசக்கர வாகனங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது. அந்த புகைப்படங்கள் முறையே

அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆகும். எனது மகன் என்னை இருசக்கர வாகனத்தில் ஏற்றிச்சென்று கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கே மருத்துவமனையில் 1 வாரம் சிகிச்சையில் இருந்தேன். அங்கு வந்த கடலாடி போலீசாரிடம் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –

நான் எத்தனை வரை படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. 24.02.2023ம்தேதி நடந்த சம்பவத்திற்கு நான் சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது வீடு கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும், எனது வீட்டின் அருகே சம்பவம் நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் வந்த வாகனத்தில் நம்பர் பிளேட் இல்லை என்று புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் புல்லட் வாகனத்தில் மட்டும் நம்பர் பிளேட் இல்லை. மற்ற இரு வாகனத்தில் நம்பர் பிளேட் இருந்தது. அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 வாகனங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தில் கலர் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நான் ரத்தக்காயத்தில் இருந்ததால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை. நான் கடலாடி அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் நான் காயம்பட்டது மயக்கம் அடைந்து விட்டேன் எனக்கு தெரியாது. போலீசார் எப்போது வந்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் தான் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கியது 26.02.2023ம்தேதி என்றால் சரிதான். மருத்துவமனையில் மருத்துவரிடம் யார் யார் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் கூறவில்லை. போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கிய போது நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான்.

எனது மனைவி காளீஸ்வரியும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்

என்றால் சரிதான். கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளியின் அருகே மதுபானங்களை விற்பனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பள்ளியின் அருகே மதுபானங்கள் விற்கக்கூடாது என்று எதிரிகள் வந்து என்னிடம் கேட்டதனால் நான் பொய்யான அவர்கள் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது கடலாடி சாயல்குடி காவல் நிலையங்களில் மதுபானங்களை விற்பனை செய்தது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், இருசக்கர வாகனங்களில் இருந்து கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:46:29 +0530